**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சை பிரிவுகள்– திட்டத் தொடராணை மற்றும் ரூ.82,28,000/– தொடர் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண். 26

நாள்: 04–09–2015
மன்மத, ஆவணி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்17–07–2013.
2. அரசாணை(நிலை) எண்.75, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–11–2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2193/இவாததி–1/2015, நாள் 18.6.2015 மற்றும் 24.05.15.

----------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்காக 32 மாவட்டங்களில் 2013–2014 ஆம் ஆண்டு முதல் நடமாடும் சிகிச்சைப் பிரிவு தொடங்க அனுமதியும், மேலும் இத்திட்டத்திற்கென ரூ.4,49,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2014–2015 ஆம் ஆண்டுக்கு நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக ரூ.38,12,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 16.6.2015 அன்று 32 மாவட்டங்களுக்கும் 32 வாகனங்கள் உட்புற வடிவமைப்புகள் மேற்கொள்ளப்பட்டும், இயன்முறை சிகிச்சைக் கருவிகள் பொருத்தப்பட்டும், திட்டங்கள் தொடர்பான விளம்பரத் தொகுப்புகளுடன் மாவட்டங்களில் பயன்பாட்டிற்கு கொண்டு வர துவக்கி வைக்கப்பட்டு, மாவட்டங்களில் பணிகள் துவக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், 2015–16 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தினை தொடர திட்டத் தொடராணையும் தொடர் செலவினங்களுக்காக ரூ.97,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

(த.பி.பா)

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2015–2016 ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, கீழ் கண்டுள்ளவாறு ரூ.82,28,000/–(ரூபாய் எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், திட்டத் தொடராணையும், மேலும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| **வ.எண்.** | **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநருக்கான தொகுப்பூதியம்<br>ரூ.8,000/– x 10 மாதங்கள் | ரூ.80,000/– |
| 2. | ஊர்தி உதவியாளர்களுக்கான தொகுப்பூதியம்<br>ரூ.5,000/– x 10 மாதங்கள் | ரூ.50,000/– |
| 3. | விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு சாதனங்கள் செலவினம்<br>ரூ.27,125/– வீதம் ஒரு மாவட்டத்திற்கு | ரூ.27,125/– |
| 4. | எரிபொருள் செலவினம் + பராமரிப்பு செலவினம்<br>ரூ.10,000/– x 10 மாதங்கள் | ரூ.1,00,000/– |
| | மொத்தம் (ஒரு மாவட்டத்திற்கு) | ரூ.2,57,125/– |
| | **32 மாவட்டங்கள் x ரூ.2,57,125/–** | **ரூ.82,28,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–MV மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்–

| | |
|---|---|
| 08– விளம்பரமும் பிரச்சாரமும் 01 விளம்பரக் கட்டணங்கள்<br>(2235 02 101 MV 0816) | ரூ.8,68,000/– |
| 45– பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>(2235 02 101 MV4509) | ரூ.32,00,000/– |
| 33– தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 தொகுப்பூதியம் (ஊர்தி ஓட்டுநர் மற்றும் ஊர்தி உதவியாளர்)<br>(2235 02 101 MV 3340) | ரூ.41,60,000/– |
| மொத்தம் | ரூ.82,28,000/– |

(த.பி.பா)

5. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 49184/நிதி(சந)/2015, நாள் 01.09.2015–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.